## 2025.02.09 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. அரச நிதிச் செயலாற்றுகை தொடர்பான கூற்று – 2024 நான்காம் காலாண்டு

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 53(1) ஆம் பிரிவுக்கமைய, குறைந்தது காலாண்டு அடிப்படையில் நிதி விடயதானத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களால் அரச வருமானம் மற்றும் செலவு உள்ளிட்ட நிதிச் செயலாற்றுகை தொடர்பான கூற்று காலாண்டு முடிவடைந்து 45 நாட்களை விஞ்சாததொரு காலப்பகுதியில் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த ஏற்பாட்டின் பிரகாரம் 2024.12.31 ஆம் திகதியில் பூர்த்தியடைகின்ற 2024 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று 2025.02.14 அன்று அல்லது அதற்கு முன்னர் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கமைய, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்படுத்தலுக்கமைய 2024.12.31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற நான்காவது காலாண்டு வரைக்கும் அனைத்து விசேட செலவுப் பிரிவுகள், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்கள் மூலமாக பதிவு செய்யப்பட்ட திரண்ட வருமானம் மற்றும் செலவு உள்ளடங்கலாக தயாரிக்கப்பட்டுள்ள நிதிச் செயலாற்றுகை தொடர்பான அறிக்கை அமைச்சரவையின் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

### 02. இலங்கைக்கும் ஐக்கிய அரபு எமிர் குடியரசுக்கும் இடையில் பரஸ்பர முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான உத்தேச ஒப்பந்தம்

முதலீட்டாளர்கள் மற்றும் அவர்களுடைய முதலீடுகளுக்கு நேயம்மிக்க நிறுவனச் சூழலை உறுதிப்படுத்துவதன் மூலம் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக சட்டரீதியான பொறிமுறையை உருவாக்குவதற்காக இலங்கைக்கும் ஐக்கிய அரபு எமிர் குடியரசுக்கும் இடையில் பரஸ்பர முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு இருதரப்பினரும் உடன்பாடுகளை எட்டியுள்ளனர். உத்தேச ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதன் மூலம் ஐக்கிய அரபு எமிர் குடியரசின் இலங்கைக்கான நேரடி வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும், முதலீடுகள் மற்றும் வர்த்தகத் துறைகளில் இரு நாடுகளுக்கிடையில் காணப்படுகின்ற இருதரப்பு தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதற்கு இயலுமை கிட்டியுள்ளது. இருதரப்பினருக்கிடையில் கையொப்பமிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கிணங்க, 2025 உலக நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கௌரவ ஜனாதிபதி அவர்கள் ஐக்கிய அரபு எமிர் குடியரசுக்கு மேற்கொள்ளவுள்ள உத்தியோகபூர்வ விஜயத்தின் போது குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 03. இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் ஆவணங்களை டிஜிட்டல் மயப்படுத்தல் கருத்திட்டம்

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் வினைத்திறன், செவ்வை மற்றும் அணுகலை அதிகரிக்கும் நோக்கில், அதன் ஆவணங்களை டிஜிட்டல் மயப்படுத்தல், நாட்டின் புலமைச் சொத்து நிர்வாகம் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்குத் தேவையான படிமுறையென அடையாளங் காணப்பட்டுள்ளது. அதனால், நிகழ்நிலை மூலம் பதிவு செய்யும் வசதிகள், இலத்திரனியல் முறையில் கோவைப்படுத்தி அறிக்கைகளைப் பேணுகின்ற தொகுதிகள், ஆவணப்படுத்தப்பட்டுள்ள அறிக்கைகளை

டிஜிட்டல் மயப்படுத்தல் மற்றும் அவ்வாறான டிஜிட்டல் மயப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் நிகழ்நிலை தொடர்பாடல் தளங்களை அறிமுகப்படுத்தல் மிகவும் நம்பகமான, மேலும் துரிதமானதும் பயனர்களுக்கு நேயம்மிக்க புலமைச் சொத்துச் சேவைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, இலங்கை தேசிய புலமைச்சொத்து செயலகத்தின் நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறன் மற்றும் பயனுள்ளதாக நிறைவேற்றுவதற்கு வசதியாக அமையும். குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 70.2 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான தொழிநுட்பம் மற்றும் சேவைகளை நன்கொடையாக வழங்குவதற்கு உலகப் புலமைச் சொத்து நிறுவனம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, இலங்கை தேசிய புலமைச் சொத்துச் செயலகத்தின் ஆவண டிஜிட்டல் மயப்படுத்துவதற்கான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், முன்மொழியப்பட்டுள்ள நன்கொடையைப் பெற்றுக் கொள்வதற்காக உலகப் புலமைச் சொத்து நிறுவனத்துடன் ஒத்தழைப்பு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு தொகுதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் விரிவாக்கம் செய்தல்**

சந்தைக் கேள்வியை பூர்த்தி செய்வதற்காக அளவுசார் மற்றும் பண்புசார் இருபிரிவுகளிலும் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பை நவீனமயப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், அவை வெற்றியளிக்கவில்லை. அப்பணிகளுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வேறுவேறாக அரச தொழில்முயற்சியாக சப்புகஸ்கந்த எண்ணெய்ச் சுத்திகரிப்பை நிறுவி பொருத்தமான மூலோபாய முதலீட்டுப் பங்காளரை அடையாளங் காண்பதற்கும், திருகோணமலைப் பிரதேசத்தல் புதிய எண்ணெய்ச் சுத்திகரிப்பை நிறுவுவதற்கான இயலுமைகளைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பினும், இதுவரை அதுதொடர்பாக எவ்வித படிமுறைகளும் மேற்கொள்ளப்படவில்லை. சமகால அரசின் வலுசக்திக் கொள்கைச் சட்டத்தின் கீழ் பேணப்படும் சுத்திகரிப்பு நவீனமயப்படுத்தல் அல்லது புதிய சுத்திகரிப்பை நிர்மாணித்தல் முதன்மைப் பணிகளாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சாத்தியவளக் கற்கையின் அடிப்படையில் பொருத்தமான முதலீட்டுப் பங்காளர்களை அடையாளங் காண்பதற்கான விருப்பக் கோரலுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பை அபிவிருத்தி செய்தல் மற்றுத் குறித்த வளாகத்திலேயே நிர்மாணித்தல், செயற்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) அடிப்படையில் நாளொன்றுக்கு 100,000 பரல்கள் கொள்ளளவுடன் கூடிய புதிய சுத்திகரிப்பை நிறுவுகின்ற கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விருப்பக்கோரலை மேற்கொள்வதற்கும், தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற நிறுவனத்திடம் கருத்திட்ட முன்மொழிவுகளைக் கோருவதற்கும் வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. புதிய ஊழியர் சேமலாப நிதிய முகாமைத்துவத் தொகுதியை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்**

இலங்கையின் பாரிய ஓய்வூதிய நிதியமான ஊழியர் சேமலாப நிதியத்தின் தற்போதய மொத்த அங்கத்தவர்களின் கணக்குகளின் எண்ணிக்கை 21.5 மில்லியன்களாவதுடன், சேமலாப நிதி அனுப்பப்பட்டு இயங்குநிலையிலுள்ள சேவை வழங்குநர்களின் எண்ணிக்கை 77,000 ஆகும். 2024 ஒக்டோபர் மாத இறுதியாகும் போது, நிதியத்தின் ஒட்டுமொத்த சொத்தின் அளவு 4.2 ட்ரில்லியன்களாவதுடன், கடந்த சில ஆண்டுகளில் அதன் சொத்துக்களின் வருடாந்த வளர்ச்சி வீதம் 9% சதவீதமான அதியுச்சளவில் பதிவாகியுள்ளது. ஊழியர் சேமலாப நிதியத்தின் நடவடிக்கைகளை நேர்த்தியாகப் பேணிச் செல்வதற்காக அதிகளவான அங்கத்தவர்களை உருவாக்கக்கூடிய பயனர்

கணக்குகள் மற்றும் தரவுகளை அதிகளவில் உயரிய வினைத்திறனுடன் பேணிச் செல்வதற்கான சாத்திய வளத்துடன் கூடிய தகவல் தொழிநுட்பத் தொகுதியின் தேவை அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கிணங்க, புதிய ஊழியர் சேமலாப நிதியத்தின் முகாமைத்துவத் தொகுதியொன்றை உருவாக்குவதற்கும் உலக வங்கிக் குழுமத்தின் நிதிப்பிரிவு நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்தியாவின் PricewaterhouseCoopers Private Limited இன் ஆலோசனையின் கீழ் புதிய முகாமைத்துவ தொகுதியின் திட்டம் மற்றும் தேவையான விபரக் குறிப்புக்கள் தயாரிப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு உத்தேச கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தொகுதி இணைப்பு (System Integrator) தெரிவு செய்வதற்காக பெறுகைச் செயன்முறையை ஆரம்பிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுதல்/நடமாடும் பிரதேசத்தில் சர்வதேச ரீதியான செயற்படும் உணவுப்பான வலையமைப்புக்களின் விற்பனை நிலையமொன்றை இயக்குதல்**

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுதல்/நடமாடும் பிரதேசத்தில் 20-D, 29-D, 39-D மற்றும் 42-D போன்ற தளங்களில் தேவையான 04 சர்வதேச ரீதியாக இயங்குகின்ற உணவுப்பான வலையமைப்புக்களின் விற்பனை நிலையங்களை 03 ஆண்டுகளுக்கு வழங்குவதற்குப் பொருத்தமான இயக்குநர்களைத் தெரிவு செய்வதற்காக சர்வதேச போட்டி விலைமுறியைக் கோருவதற்குப் பொருத்தமான பெறுகை முறையைக் கடைப்பிடித்து விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்காக, 06 விலைமுறிதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ளனர். அதற்கமைய, தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய, விபரங்களுடன் பதிலளிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுடன் இயக்கச் செயற்பாடுகளைப் பேணிச் செல்வதற்காக விமான சேவைகள் அமைச்சருக்கு வழங்கிய நிறுவனத்தில் இயக்கங்களை மேற்கொண்டு செல்வதற்காக ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| **தள இல** | **நிறுவனம்** | **மொத்த ஒப்பந்தப் பெறுமதி (அமெரிக்க டொலர் மில்லியன்)** |
|---|---|---|
| 20–D | HMS Host Services India (Pvt) Ltd | 1.57 + ஏற்புடைய வரிகள் |
| 29-D | Barista Coffee Lanka (Pvt) Ltd | 0.60 + ஏற்புடைய வரிகள் |
| 39-D | Jubilant Food Works Lanka (Pvt) Ltd | 1.99 + ஏற்புடைய வரிகள் |
| 42-D | Gamma Pizzakraft Lanka (Pvt) Ltd | 3.06 + ஏற்புடைய வரிகள் |

**07. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படும் கிராமிய வீதிகளைப் புனரமைப்பு செய்தல் மற்றும் மேம்படுத்தல்**

சமகால அரசால் கிராமிய வீதி அபிவிருத்தி செய்தல் அரசின் அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலில் முக்கிய பணியாக அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், வீதியைப் புனரமைப்புச் செய்தல், நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பதற்காக விரிவான அணுகுமுறை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பல வீதிகள் புனரமைக்கப்பட வேண்டிய நிலைமையில்

காணப்படுவதுடன், ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 1,500 கிலோமீற்றர்கள் வடமாகாணத்திலும் மற்றும் 500 கிலோமீற்றர்கள் கிழக்கு மாகாணத்திற்கும் முன்னுரிமை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்காக வீதிகளைத் தெரிவு செய்வதற்காக பொதுமக்கள், நிதியனுசரணை வழங்குகின்ற அமைப்புக்கள் மற்றும் உள்ளுராட்சி மன்றங்களின் பங்கேற்பைப் பெற்றுக் கொள்வதுடன், விதந்துரைக்கப்பட்டுள்ள வீதிகளின் பட்டியலுக்கு மற்றும் குறித்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கமைய, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமிய வீதிகளைப் புனரமைக்கின்ற வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**08. உற்பத்தி வரி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

மோட்டார் ஊர்தி, சிகரட், இனிப்புப் பானம் மற்றும் புகையிலை உள்ளிட்ட ரூபாயின் பெறுமதி திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தி வரியின் கீழ் அனைத்துப் பொருட்களுக்கான உற்பத்தி வரி 2025.01.11 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் 5.9% சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. குறித்த தீர்மானத்தை வலுவுடையதாக்கி 1989 ஆம் அண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் 2025.01.10 திகதிய 2418/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், 2025.01.11 திகதி தொடக்கம் வலுவுடையதாகும் வகையில் மதுபானத்திற்கான மதுவரி 5.9% சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக (52 ஆம் அத்தியாயத்தின்) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் 01/2025 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் 2025.01.10 ஆம் திகதிய 2418/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்குறிப்பிட்டுள்ள ஒழுங்குவிதி மற்றும் மதுவரி அறிவித்தலுக்கு பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சட்டத்தின் மூலம் நெல் மற்றும் அரிசிக் கொள்வனவின் போது, விற்பனை செய்தல், விநியோகித்தல், குற்றுதல், சூடுமிதித்தல் மற்றும் அவ்வாறான செயலாக்கங்களை வியாபாரங்களாக நடாத்திச் செல்வதற்காக சபையொன்றை தாபிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் மற்றும் அதற்குரிய சேவைகளை வழங்குதல் தொடர்பான விளைவாய்ந்தவையான விடயங்களுக்கான சட்டரீதியான ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. குறித்த சட்டம் விதிக்கப்பட்டு 1971 தொடக்கம் இதுவரை 54 ஆண்டுகளாயினும், அதற்கான எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்படாமல், இற்றைப்படுத்தப்படாத சட்டமாக நடைமுறையிலுள்ளது. குறித்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் இற்றைப்படுத்துவதற்கு நீண்டகாலம் எடுக்கின்றமையால், தற்போது அடையாளங் காணப்பட்டுள்ள பிரச்சினையான, முறைசாரா வகையில் நெல் மற்றும் அரிசி இருப்புக்களைச் சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக அனுமதிப்பத்திர முறைமையை அறிமுகப்படுத்துவதற்காக சட்டத்திலுள்ள குறித்த ஏற்பாடுகளைத் துரிதமாகத் திருத்தம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல்

சபை சட்டத்தை திருத்தம் செய்வதற்காக விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பணிக்குழாமினரை முகாமைமத்துவம் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்தரைகளை நடைமுறைப்படுத்தல்**

அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செயன்முறையை மீளாய்வு செய்து தேவைகள், முன்னுரிமைகள் மற்றும் நேர அட்டவணையை அடையாளங் கண்டு, அதுதொடர்பாக கட்டாயமாக ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிய அளவை அடையாளங் கண்டு அதற்கமைய, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்காக 2024.12.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த குழுவுக்கு அந்தந்த அமைச்சுக்களால், அவற்றின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேண்டுகோள்களைக் கருத்தில் கொண்டு, குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்காக அந்தந்த அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்காக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| **தொடர் இல** | **அமைச்சுக்கள்/மாகாணசபை/ஆணைக்குழு** | **ஆட்சேர்ப்பு செய்வதற்காக குழுவால் விதந்துரைக்கப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | 3000 |
| 2. | பாதுகாப்பு அமைச்சு | 09 |
| 3. | விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு | 179 |
| 4. | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சு | 132 |
| 5. | கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு | 400 |
| 6. | போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 161 |
| 7. | சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | 3,519 |
| 8. | மேல் மாகாண சபை | 34 |
| 9. | கிழக்கு மாகாண சபை | 05 |
| 10. | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 17 |
| **மொத்தம்** | | **7,456** |

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**